# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 08.06.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

இந்த ஜமாஅத்தின் முன்னேற்றம் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவன் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேறுவதை ஒவ்வொரு அஹ்மதியும் இன்னும் சொல்வதென்றால் அஹ்மதிய்யத்தின் எதிரிகளும் பார்க்கின்றனர். இன்று அல்லாஹ்வின் அருளால் உலகிலுள்ள எந்தவொரு நாட்டிற்குச் சென்றாலும் அங்கு அஹ்மதிகளைப் பார்க்கலாம். அவர்கள் ஒரு சில நபர்களாக இருந்தாலும் சரியே!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் ஜமாஅத்திடம் இந்த வாக்குறுதியை செய்துள்ளான். அதாவது, அவர்களுக்கு இல்ஹாமாக இறங்கியுள்ள திருக்குர்ஆன் வசனத்தின் இந்தப் பகுதியை விளக்குகின்ற சமயத்தில் பராஹீனே அஹ்மதிய்யாவில் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்.

எவர்கள் உம்மைப் பின்பற்றுகின்றனரோ, மேலும் உண்மையான முறையில் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பின்பற்றுபவர்களாக ஆகி விடுவார்களோ அவர்களுக்கு, அவர்களது எதிரிகள் மீது கியாமத் நாள் வரை நான் வெற்றியை வழங்குவேன். அந்த மக்கள் அத்தாட்சிகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் தங்களது எதிரிகள் மீது வெற்றி பெறுவார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவ்கள் நான் படித்த இந்த மேற்கோளில் அல்லாஹ் ஜமாஅத்திடம் செய்துள்ள இந்த வாக்குறுதி தொடர்பாக தனது இந்த கருத்தைக் கூறிய பிறகு தொடர்ந்து கூறுகின்றார்கள்:

இறைவனது வாக்குறுதி உண்மையானதாகும். இப்போது விதை விதைக்கப்படுகின்றது.

இவ்வாறு அவர்கள் 1902 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் கூறியுள்ளார்கள்.

கூறுகின்றார்கள்: இப்போது விதை விதைக்கப்படுகிறது. நமது எதிரிகள் என்ன விரும்புகின்றனர்? அல்லாஹ்வின் நாட்டம் எவ்வாறு இருக்கின்றது. அவர்கள் சிந்தித்தால் இதனை அவர்கள் இப்போதும் புரிந்து கொள்ளலாம்.

கூறுகின்றார்கள்: அவர்கள் தங்களது எல்லா வகையான திட்டங்களிலும் தந்திரங்களிலும் தோல்வியைத் தழுவுகின்றனர் என்பதை சிந்திக்க வேண்டும்.

பிறகு கூறுகின்றார்கள்: இந்த எதிரிகள் இல்லாமல் இருந்தால் இங்கும் இப்படிப்பட்ட அற்புதமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்காது. அதாவது இந்த முன்னேற்றத்தில் அற்புதத்தின் தன்மை இருந்திருக்காது. ஏனென்றால், எதிர்ப்பது, போட்டி போடுவது ஆகியவற்றால் தான் அற்புதம் பிரகாசிக்கின்றது.

கூறுகின்றார்கள்: ஒருபுறம் நம்மை அழிப்பதற்காக எதிரிகள் இந்த முயற்சிகளைச் செய்கின்றனர். நமது ஸலாத்தைக் கூட அவர்கள் கேட்பதில்லை. மறைவான நிலையில் வெறுப்புடன் நம்மைப் பற்றி பேசுகின்றனர்.

இப்போது இந்த எதிர்ப்புகள் அதன் இறுதி எல்லையை அடைந்து விட்டன. இன்னும் சொல்வதென்றால் காட்டுமிராண்டித்தனம், கீழ்த்தரமான சொற்களைப் பேசுவது ஆகியவற்றில் வெளிப்படையாகவே இவர்கள் அதன் எல்லா வரம்புகளையும் மீறி விட்டார்கள். எவ்வாறிருப்பினும் இதுவே எதிரிகளின் செயலாகும்.

அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்: மறுபுறம் அல்லாஹ் வியப்பூட்டும் வகையில் இந்த ஜமாஅத்தை வளர்ச்சியடையச் செய்கின்றான். இது அற்புதம் இல்லையென்றால் வேறு என்ன?

இது நமது செயலா? அல்லது நமது ஜமாஅத்தின் செயலா? இல்லை. இது இறைவனின் செயலாகும். இதன் ஆழத்தையும் இரகியத்தையும் எவராலும் புரிந்து கொள்ள முடியாது.

கூறுகின்றார்கள்: இது இறைவனின் பணியாகும். அவனது பணிகள் வியப்பானதாகவே இருக்கும்.

எனவே இறைவனின் இந்த வியப்பான ஆதரவு மற்றும் உதவியின் காட்சிகளை நாம் ஒவ்வொரு நாளும் பார்க்கின்றோம். நல்ல இயல்புள்ள மக்கள் ஜமாஅத்தில் இணைகின்றனர். அதுமட்டுமின்றி நாள்தோறும் ஜமாஅத்தின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. ஜமாஅத்தின் எண்ணிக்கையிலும் பரக்கத் ஏற்பட்டுள்ளது. செல்வங்களிலும் பரக்கத் ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சி அஹ்மதிய்யத்தின் எதிரிகளை பொறாமையின் நெருப்பில் இன்னும் அதிகமாக எரித்துக் கொண்டே செல்கிறது. ஒவ்வொரு நாளும் பாகிஸ்தானிலிருந்து இப்படிப்பட்ட செய்திகள் வருகின்றன. வெறுப்பும், பகைமையும், காழ்ப்புணர்ச்சியும் இவர்களை எந்த அளவு குருடர்களாக ஆக்கிவிட்டதென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது புகைப்படத்தை சீர்குலைத்து அதை பிறருக்கு காட்டுகின்றனர். அதில் ஏச்சுப் பேச்சுக்களை எழுதுகின்றனர். தமது கால்களுக்கு கீழே போட்டு அதை மிதிக்கின்றனர். ஒரு பாக்கியம் கெட்டவர் தமது கடையின் நுழைவாயிலில் கால் வைத்து நுழையும் இடத்தில் இந்தப் படத்தை வைத்துள்ளார். யார் வந்தாலும் அதன் மீது தமது காலை வைத்து விட்டு வரும் வகையில் அதை வைத்துள்ளார். எவ்வாறிருப்பினும் இவை இவர்களது செயல்களாகும். ஆனால் அல்லாஹ் ஆட்சியாளர்களில் சில நல்ல இயல்பு உள்ளவர்களை நமக்கு ஆதரவாக நிற்கும்படி செய்கின்றான். இவ்வாறே இந்த சந்தர்ப்பத்திலும் பணியில் இருந்த ஒரு அதிகாரி இவ்வாறு செய்தவர்கள் மீது கடினமாக நடந்து கொண்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது புகைப்படத்தை அவர் அங்கிருந்து அகற்றினார்.

ஆனால் இந்த எதிரிகள் நினைவில் கொள்ள வேண்டும். இது இறைவனின் பணியாகும். அல்லாஹ் தனக்கு பிரியமானவருக்கு ஆதரவளிக்கின்றான். அவருக்கு உதவி செய்கின்றான். அவருக்காக தன்மான உணர்வு கொண்டவனாக இருக்கின்றான். தனக்கு பிரியமானவரிடம் தீய இயல்புடன் நடந்து கொண்ட இவர்களை அவனது தன்மான உணர்வு பழிவாங்கும். நிச்சயம் பழிவாங்கும். நிச்சயமாக இந்த மக்களும் இவர்களது தலைவர்களும் படிப்பினைக்குரிய அடையாளமாக ஆவார்கள் இன்ஷா அல்லாஹ். ஒரு நேரம் வரும். அப்போது இந்த புகைப்படங்கள் அல்ல; மாறாக இவர்களே இதை விட அதிகமாக மிதித்து நசுக்கப்படுவர். அஹ்மதிகள் பொறுமையுடனும் துஆவுடனும் செயலாற்றி வருகின்றனர். இதுவே நமது போதனையாகும். நமது உள்ளங்களை புண் ஆக்குவதற்காக இவர்களது எண்ணத்திற்கேற்ப எந்த வழிமுறையை பயன்படுத்த வேண்டுமோ அதை அவர்கள் பயன்படுத்தட்டும். நாம் சட்டத்தை நமது கையில் எடுக்கமாட்டோம். எடுக்கவுமில்லை. ஆனால் நான் கூறியது போன்று பொறுமையுடனும் துஆவுடனும் செயலாற்றி வருகின்றோம். இவ்வாறே செய்து வருவோம் இன்ஷா அல்லாஹ். இதுவே ஓர் அஹ்மதியின் சிறப்பாகும். இந்த சிறப்பை உலகிலுள்ள ஒவ்வொரு அஹ்மதியும் குறிப்பாக பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகள் துல்லியமாக வெளிப்படுத்திக் காட்டிக் கொண்டே செல்ல வேண்டும். உங்களது துஆக்களில் மேலும் அதிகமாக வலிமையை ஏற்படுத்துங்கள். இதுவே நமது ஆயுதமாகும். இதைத் தவிர வேறு எந்த ஆயுதமம் நமக்கு பயன் தராது. இதை செய்ய வேண்டும். அதை செய்ய வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். முதலில் உங்களது துஆக்களை அதன் இறுதி எல்லை வரை கொண்டு செல்லுங்கள்.

எவ்வாறிருப்பினும், நான் ஜமாஅத்தின் முன்னேற்றம் தொடர்பாகவும் எவ்வாறு அல்லாஹ் நமக்கு ஆதரவையும் உதவியையும் வழங்குகின்றான் என்பதைப் பற்றியும் கூறினேன். எவ்வாறு நல்லியல்பு கொண்ட மக்களிடம் ஒரு புரட்சி ஏற்படுகின்றது என்பதை நாம் பார்க்கின்றோம். எவர்களுக்கு கொஞ்சமாவது இஸ்லாத்தின் மீது அன்பு இருக்குமோ, எவர்களுக்கு கொஞ்சமாவது மார்க்கத்துடன் தொடர்பு இருக்குமோ அவர்கள்

எந்நிலையிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் பக்கம் ஈர்க்கப்படுகின்றனர். அல்லாஹ் வழிகாட்டுகின்றான். ஆனால் மார்க்கத்தில் எவ்வித ஆர்வமும் இல்லாத உலகவாதிகள் உள்ளனர். அவர்களில் சிலர் இறைவனது இருப்பின் மீதே நம்பிக்கை கொள்வதில்லை. அவர்களும் கூட வேறு வழியின்றி இது எப்படிப்பட்ட ஜமாஅத் என்றால் இதன் பாதங்கள் ஒவ்வொரு நொடியும் முன்னேற்றத்தை நோக்கியே செல்கின்றது என்பதை சிந்தித்துப் பார்க்கும் கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளனர். நீங்கள் இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துக் கூறும் போது இந்த போதனைகள் தான் ஒருநாள் உலகில் வெற்றி பெறும் என்று எங்களுக்கு தோன்றுகிறது என்று கூறும் கட்டாயத்திற்கு இவர்கள் ஆளாகியுள்ளனர்.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறியது போன்று இது இறைவனின் செயலாகும். இது அவனது பணியாகும். அதனால் வியக்கத்தக்க விசயங்கள் வெளிப்படுகின்றன. ஜமாஅத்திலுள்ள நபர்கள் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் பணிகளைச் செய்வதற்கு தமது விரலை மட்டும் வைக்கின்றனர். ஆனால் அதன் விளைவாக ஆயிரக்கணக்கான கைகள் மூலம் நடைபெறும் பணிகளால் ஏற்படும் விளைவுகளை அவர்கள் மூலம் அல்லாஹ் உருவாக்கி விடுகின்றான். இந்த விசயம் தான் எதிரிகளை பொறாமையின் நெருப்பில் மேலும் எரியும்படி செய்கிறது. இவர்களின் இந்த பொறாமை நம்முடன் இல்லை. இவர்களின் இந்த பொறாமை இறைவனது செயல் மீது இருக்கின்றது. இதன் மூலம் அல்லாஹ் ஜமாஅத்திற்கு ஆதரவாக இருக்கின்றான் என்பதை தெளிவாக நிரூபிக்கின்ற அப்படிப்பட்ட விளைவுகளை அவன் உருவாக்குகின்றான்.

எனவே, இந்த எதிரிகளிடம் நான் கூறுகின்றேன். உங்களது எதிர்ப்பு இறைவனுடன் இருக்கின்றது. இறைவனை யாராலும் எதிர்த்து நிற்க முடியாது. எனவே, பயப்படுங்கள். இறைவனுக்கு அஞ்சுங்கள். இறைவனை எதிர்த்து நிற்பவர்களின் சாம்பல் கூட எஞ்சியிருக்காது. நம்மீது நமது பகைவர்களுக்கும் எதிரிகளுக்கும் இருக்கின்ற பொறாமையின் விளைவாக அல்லாஹ்வின் அருள்களின் மழை பொழிவதை நாங்கள் கண்டு கொண்டே வருகின்றோம். இந்த மக்கள் முஸ்லிம்கள் என்று தங்களை கூறிக்கொண்ட பிறகும்கூட அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எந்தவொரு பணியும் மற்றவர்கள் மீது இஸ்லாத்தின் அழகிய போதனைகள் வெளிப்படும் வகையில்தான் அமைந்திருக்கின்றது என்பதை இவர்கள் சிந்திப்பதில்லை.

எனவே, இந்த பெயர் தாங்கி ஆலிம்கள் இஸ்லாத்தின் மீது அன்பு கொள்பவர்கள் அல்ல. இவர்கள் தமது பதவியின் மீதே அன்பு வைத்திருக்கின்றார்கள். தங்களது சுயநலனை விரும்புபவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள்.

நமது கூற்றுக்கள் மூலம் மற்றவர்கள் மீதும் அல்லாஹ் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளான். இதனை வெளிப்படையான முறையில் நமது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இம்மக்கள் தெரிவிக்கின்றனர். அல்லாஹ்வின் அருளால் எப்போது நான் பல்வேறு நாடுகளில் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டேனோ – ஜமாஅத்துகளில் சுற்றுப்பயணம் சென்றேனோ அப்போதெல்லாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது தூதுச்செய்தி மூலமாக இஸ்லாத்தின் புதிய மகிமை மற்றவர்கள் மீது வெளிப்படுவதை நான் பார்க்கின்றேன். கடந்த நாட்களில் ஹாலந்து மற்றும் ஜெர்மனியின் ஆண்டு மாநாடுகளில் கலந்து கொள்வதற்காக நான் சென்றதை நீங்கள் அறிவீர்கள். அதில் கலந்து கொண்டு எங்கு ஜமாஅத்திலுள்ள நபர்களை சந்திப்பதற்கும் அவர்களுக்கு ஏதாவது கூறுவதற்கும் எனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததோ அங்கு மற்றவர்களுடனும் சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த நிகழ்ச்சிகள் மூலமாக மற்றவர்கள் மீது நல்ல தாக்கம் ஏற்பட்டுள்ளது. மற்றவர்கள் தங்களது அஹ்மதி நண்பர்கள் கூறியதைக் கேட்டு மாநாட்டில் கலந்து கொண்டார்களோ அவர்கள் மீதும் கூட ஜமாஅத்தின் போதனைகள், அதன் அமைப்பு ஆகியவை பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பொதுவாக எனது வழிமுறைக்கேற்ப பயணத்திற்குப் பிறகு பயணத்தின் நிலைமைகள் பற்றி சுருக்கமாக எடுத்துக் கூறுவதுண்டு. மேலும் மாநாட்டின் அமைப்புரீதியாக உள்ள விசயங்கள் பற்றியும் நான் கூறுவதுண்டு.

எனவே இன்று நான் மற்றவர்களது நிகழ்ச்சிகளைக் கூறுவதிலிருந்து ஆரம்பிக்கின்றேன். இவை யாவும் நான் இந்த பயணத்தில் பார்த்த அல்லாஹ்வின் அருள் மழையின் ஒரு சில துளிகளேயாகும். நான் ஏற்கனவே கூறியது போன்று ஹாலந்தின் மாநாட்டில் நான் கலந்து கொண்டேன். பல வருடங்களுக்குப் பிறகு இவர்களது மாநாட்டில் நான் கலந்து கொண்டேன். இங்கிருந்து பயணத்திற்காக புறப்படுவதற்கு முன்னால் ஹாலந்தின் அமீர் சாஹிபின் கடிதம் வந்தது. மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தாங்கள் வரும்போது இங்குள்ள உள்ளூர் வாசிகளான டச்சு மக்களுடன் ஒரு நிகழ்ச்சியும் இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம் என்று அவர்கள் அதில் எழுதியிருந்தார்கள். முதலில் நான் இதற்கு மறுப்பு தெரிவித்தேன். இதன் தேவை இல்லை என்று கூறினேன். ஏனென்றால், முதலில் ஜமாஅத்தில் உள்ளவர்களுக்கு படித்த கவனமாக சிந்திக்கின்ற மக்களுடன் அந்த அளவு தொடர்பு இல்லை என்று நான் நினைத்தேன். சில நாட்கள் கழிந்த பிறகு நானே இவ்வாறு சிந்தித்தேன். நமது சென்டர் இருக்கின்ற இந்தப் பகுதி அதாவது எங்கு மாநாடு நடக்க வேண்டியதிருந்ததோ அந்த இடம் அந்த இஸ்லாத்தின் எதிரி இருக்கின்ற பகுதியில் இருக்கின்றது. அவர் ஒவ்வொரு நாளும் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக வீணான விசயங்களை பேசிக்கொண்டே இருக்கின்றார். இந்த சந்தர்ப்பத்தில் இந்தப் பகுதியைச் சேர்ந்த படித்த மக்கள், அரசியல்வாதிகள், பத்திரிகை நிரூபர்கள் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டால் அது மிகவும் நல்லது என்று நான் கருதினேன். அங்குள்ள ஜமாஅத் மிகவும் சிறிய ஜமாஅத்தாக இருப்பதால் எப்படியும் 15 அல்லது 20 நபர்களை இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வைப்பார்கள் என்று நான் நினைத்தேன். ஆனால் அல்லாஹ்வின் அருளால் 125ற்கும் அதிகமான மக்கள் இதில் கலந்து கொண்டனர். இந்தப் பகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும், நகரத்தின் மேயரும், அரசியல்வாதிகளும், படித்த மக்களும் இதில் கலந்து கொண்டனர். சிறிய பத்திரிகைகளின் பிரதிநிதிகளைத் தவிர வியப்பூட்டும் வகையில் தேசிய அளவிலுள்ள ஒரு பத்திரிகையின் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். அவர்களுக்கு முன்னால் இஸ்லாத்தின் அழகிய போதனைகளின் சில அம்சங்களையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியையும், திருக்குர்ஆனின் போதனைகளையும் எடுத்துக் கூறினேன்.

நான் கூறிய இந்த விசயங்கள் தொடர்பாகவே ஆட்சேபனை செய்கின்ற அந்த அரசியல்வாதி ஆட்சேபனை செய்து வந்தார். அங்குள்ள மேயரும், பாராளுமன்ற உறுப்பினரம் சுருக்கமான சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். மத நல்லிணக்கம், சகிப்புத்தன்மை ஆகியவற்றைப் பற்றி அவர்கள் பேசினார்கள். அதற்கு பிறகு நான் இஸ்லாத்தின் அழகிய போதனைகள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி ஆகியவற்றை எடுத்துக் கூறினேன். அதற்குப் பிறகு பாராளுமன்ற உறுப்பினர் என்னிடம் பேசிய போது இஸ்லாத்தின் அழகிய போதனைகள் தொடர்பாக மிகச்சிறந்த தாக்கத்திற்கு ஆளாகியவாறு அவர் இதைப் பற்றி குறிப்பிட்டார். ஹாலந்திலுள்ள ஜமாஅத்திற்கு அங்குள்ள அரசியல்வாதிகளுடன் தொடர்பில்லை என்று நான் நினைத்ததாக கூறியிருந்தேன். ஆனால் எம்.பி. அவர்களுடன் பேசிய போது இந்த விசயத்தைப் பற்றி அவர் கூறினார். அதனால் அந்த விசயமும் உறுதியாகி விட்டது. நீங்கள் அரசியல்வாதிகளுடனும் படித்த மக்களுடனும் அதிகமாக தொடர்பு வைத்துக் கொண்டிருங்கள். அவர்களுக்கு இஸ்லாத்தின் அழகிய போதனைகள் பற்றி கூறுங்கள். பிறகு பத்திரிகைகளிலும் இணையதளத்திலும் இதுபற்றி எடுத்துக் கூறுங்கள் என்று அவர் கூறினார். இவ்வாறு அவர் பெயரை குறிப்பிடாமல் சைகையாக இந்த பணிகளை நீங்கள் செய்தால் வெல்டர்ஸ் போன்ற இஸ்லாத்தின் எதிரியின் வாயை அடைத்து விடலாம் என்று அவர் கூறினார். இதன் மூலம் பொதுமக்களுக்கும் இஸ்லாத்தின் அழகிய போதனைகள் பற்றி தெரிய வரும். பாருங்கள்! இங்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சொற்கள் எவ்வாறு நிறைவேறியுள்ளன?

அதாவது, இறைவனின் பணியும் வியக்கத்தக்கவையாகும். இது இறைவனின் வேலையாகும். கிறிஸ்தவராக இருக்கக்கூடிய ஒரு நபர் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை தம் நாட்டிலுள்ள மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கான வழிமுறையை நமக்கு தெரிவிக்கின்றார். பிறகு இந்த நல்ல இயல்புள்ள பாராளுமன்ற

உறுப்பினர் ஒரு நீண்ட காலமாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். பழைய அனுபவமிக்க அரசியல்வாதியாக இவர் இருக்கின்றார். இவர் தமது இணையதளத்தில் என்னுடைய புகைப்படம் மற்றும் அவரது புகைப்படத்துடன் இந்த நிகழ்ச்சி பற்றியும், மீட்டிங் பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறியிருந்தார். பிறகு தனிப்பட்ட முறையில் என்னை அவர் சந்தித்த விபரங்கள் பற்றியும் அதில் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். இதுபற்றி ஏற்கனவே என்னிடம் அவர் கூறிவிட்டு சென்றார். நான் இந்த எல்லா விசயங்களையும் அதில் கொடுப்பேன். அதன் மூலம் இஸ்லாம் தொடர்பாக நமது நாட்டிலுள்ள மக்களுக்கு இருக்கின்ற தவறான எண்ணங்கள் அகல வேண்டும் என்று அவர் கூறியிருந்தார். சில சுயநலவாதிகள், சில அரசியல்வாதிகள இஸ்லாத்தின் எதிரிகள் இப்படிப்பட்ட வெறுப்புணர்வுகளை நாட்டில் பரப்புகின்றார்கள். அது அகல வேண்டும் என்று அவர் கூறியிருந்தார்.

பிறகு பத்திரிகைகளும் மிகவும் நல்ல முறையில் இந்த நிகழ்ச்சியின் விபரங்கள் பற்றியும் நான் கூறியதையும் எழுதியது. அங்குள்ள தேசிய அளவிலான இரண்டு பெரும் பத்திரிகைளின் பிரதிநிதிகள் வந்திருந்தனர். ஒருவர் என்னுடன் சில நிமிடங்கள் வரை நேர்காணல் எடுத்தார். அங்கு பத்திரிகை நிரூபர் கேள்விகள் கேட்பதை முடித்த பிறகு நான் அவரிடம் என்னிடம் ஒரு கேள்வி இருக்கின்றது என்று கூறினேன். அந்தக் கேள்வி இதுதான். நமது சென்டர் இருக்கின்ற நான்ஸ்பிட் என்ற இந்தப் பகுதியை ஹாலந்தில் பைபிள் பெல்ட் என்று கூறுகின்றனர். மார்க்கத்தைப் பற்றிய அறிவுள்ளவர்களாக இந்த மக்கள் உள்ளனர். ஹாலந்தில் எஞ்சியுள்ள ஏனைய பகுதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த பகுதியில் உள்ளவர்கள்தான் அதிக எண்ணிக்கையில் சர்ச்சிற்கு செல்லக் கூடியவர்களாக இருக்கின்றனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் இரண்டாவது வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களாக நீங்கள் இருக்கின்றீர்கள். உங்களது கருத்திற்கேற்ப அந்த வருகைக்கான சில அடையாளங்களும் கூறப்படுகிறது. உங்களது கருத்தின்படி அந்த நேரம் வந்து விட்டது. இன்னும் சொல்வதென்றால் அந்த நேரம் கடந்து விட்டது. ஆனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வரவில்லை. ஆனால், எவர் வந்துள்ளாரோ அவரை நாங்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். அதைப் பற்றி நீங்கள் சிந்தனை செய்யுங்கள் என்று நான் கூறினேன்.

நான் கூறிய இவ்விசயங்களைக் கேட்டதும் அவரது முகம் சற்று சிவந்து விட்டது. ஆனால் சிரித்தவாறு அவர் அமைதியாக இருந்து விட்டார். அதுபற்றி எதுவும் அவர் கூறவில்லை. இந்த விசயம் நடந்த பிறகு நமது நிகழ்ச்சி தொடர்பாக அவர் பத்திரிகையில் செய்தி வெளியிடமாட்டார் என்று நான் நினைத்தேன். அவ்வாறு செய்தி வெளியிட்டாலும் ஒருவேளை உண்மையான விபரங்களை அவர் தெரிவிக்காமல் இருந்து விடுவார் என்று நான் நினைத்தேன். ஆனால் மறுநாள் எனக்கும் அங்குள்ள ஜமாஅத்திற்கு இந்த விசயம் வியப்பூட்டக்கூடியதாக இருந்தது. அவர் பத்திரிகையில் செய்தியும் வெளியிட்டிருந்தார். மேலும் பத்திரிகையின் முதல் பக்கத்திலேயே எனது படத்தையும் அவர் வெளியிட்டிருந்தார். பத்திரிகைக்கு உள்ளேயும் ஒன்றரை பக்கத்திற்கு நிகழ்ச்சி பற்றிய செய்தியை புகைப்படங்களுடன் அவர் வெளியிட்டிருந்தார். மாநாடு தொடர்பாகவும் மிக விளக்கமாக விசயங்களை எடுத்துக் கூறியிருந்தார். இஸ்லாத்தின் போதனைகள் பற்றி செய்திகளை தந்திருந்தார். இந்தப் பத்திரிகை தேசிய அளவிலுள்ள பத்திரிகையாகும். இலட்சக்கணக்கான எண்ணிக்கையில் இது படிக்கப்படுகின்றது. இதன் மூலம் இஸ்லாத்தின் அழகிய போதனைகள் இந்த நாட்டிலுள்ள மக்களுக்கும் எட்டி விட்டது.

இவ்வாறே தேசிய அளவிலுள்ள இன்னொரு செய்தித்தாளும் இதுபற்றிய செய்தியை வெளியிட்டுள்ளது. உள்ளூர் செய்தித்தாள்களும் நல்ல கவரேஜ் செய்துள்ளது. அவற்றின் சில பகுதிகளை நான் எடுத்துக் கூறுகின்றேன்.

முதலாவதாக, ஹாலந்தின் தேசிய செய்தித்தாளான டேக் பிலாடு என்ற பத்திரிகை முதலில், **அமைதியைக் கொண்டு வருகின்ற கலீஃபா** என்று செய்தி வெளியிட்டது. பிறகு என்னை மேற்கோள்

காட்டியவாறு **ஈஸாவின் இரண்டாவது வருகை தொடர்பாக இந்த ஜமாஅத்தின் கொள்கை என்னவென்றால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள். எனவே, அவர் திரும்ப வரமாட்டார். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிபின் வருகையே ஹஸ்ரத் ஈஸாவின் இரண்டாவது வருகையாகும்** என்று அது செய்தி வெளியிட்டது.

மிக நீளமான விளக்கமான செய்தியாகும். அதில் சிலவற்றை மட்டும் நான் படிக்கின்றேன். பிறகு அவர் எழுதுகின்றார்:

இந்த ஜமாஅத் உலகில் தனது தப்லீக் முயற்சிகள் மூலம் பரவிக் கொண்டிருக்கிறது. அஹ்மதிகளின் கூற்றுக்களில் மிக குறைவாகவே அல்லது முற்றிலுமே கடினமாக சொற்கள் ஒருபோதும் பயன்படுத்தப்படுவதில்லை. மேற்கத்திய நாடுகளில் ஜமாஅத் நிறுவப்பட்டதற்கு பிரச்சாரகர்கள் மட்டும் காரணமல்ல. மாறாக, அவர்களது பூர்வீக நாடுகளில் அவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சனைகளும் இதற்கு காரணமாக இருக்கின்றது. இதற்குப் பிறகு அவர் பாகிஸ்தானிலிருந்தும் ஹிஜ்ரத் செய்து வந்துள்ள அஹ்மதிகளைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

பிறகு அவர் எழுதுகின்றார்: ஜமாஅத்திலுள்ள நபர்களுக்கு ஜமாஅத்துடனும் பரஸ்பரம் ஒருவருக்கு மற்றவருடனும் ஒரு ஆழமான தொடர்பு இருக்கின்றது.

பிறகு அவர் மாநாடு தொடர்பாகவும் விளக்கமான செய்திகளை வெளியிட்டுள்ளார்.

பிறகு என்னைப் பற்றி நான் என்ன கூறினேன் என்பது பற்றி அவர் இவ்வாறு எழுதுகின்றார்:

“அவர் வந்திருப்பவர்களுக்கு உள்ளத்தால் நன்றி கூறினார். ஹாலந்தில் ஒரு பிரிவினர் இஸ்லாத்திற்கு எதிராக மிகவும் பொருத்தமற்ற தீய விசயங்களைக் கூறியும், அதனை பரப்பியும் கூட நீங்கள் இங்கு வந்து இஸ்லாத்தைப் பற்றி தெரிந்து கொள்ள முடிவு செய்துள்ளீர்கள். உண்மை என்பது கண்ணியத்தையும், அமைதியையும் நிலைநாட்டுவதில் தான் இருக்கின்றது” என்று நான் கூறியதை எழுதியுள்ளார்.

நான் கூறியதாக அவர் எழுதுகின்றார்: “நாங்கள் பழிவாங்கும் மனப்போக்கை கொண்டவர்களாக இல்லை என்பதை உறுதியுடன் என்னால் கூற முடியும். ஆனால் முஸ்லிம்களில் இப்படிப்பட்ட கடுமையான எண்ணங்களைக் கொண்ட பிரிவினரும் இருக்கின்றார்கள்.” இந்த முஸ்லிம்களின் இந்த செயல் முற்றிலும் தவறானது என்ற விசயம் தொடர்பாக கலீஃபாவுக்கு நன்றாக தெரிகிறது.

பிறகு எழுதுகின்றார்: “”இது முஹம்மது (ஸல்) அவர்களது முன்மாதிரிக்கு முற்றிலும் எதிரானதாகும்.”

பிறகு எழுதுகின்றார்: “ஹாலந்தில் ஒருவர் மற்றவருக்கு குறைவாக மதிப்பளிக்கின்ற இந்த நிலை வேதனைக்குரியதாக இருக்கின்றது” என்று கலீஃபா கூறினார். குறிப்பாக மற்றவர்களை மதிக்காதவர்கள் ஆட்சியாளர்களாக வருவது வேதனைக்குரியதாகும். இதனால் பிறகு பிரச்சனைகள் எழுகின்றன.

இன்னொரு தேசிய அளவிலான தோரவு என்ற செய்தித்தாள் அது தமது தலையங்க செய்தியில் கலீஃபா தீவிரவாதத்தை விரும்புவதை கண்டித்துள்ளார்.

நான் கூறியதாக பெரிய எழுத்துக்களில் இவ்வாறு எழுதியுள்ளார்: “இந்த பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்துடன் தொடர்புபடுத்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது குற்றம் சுமத்தாதீர்கள்.”

பிறகு எழுதுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கைக்கேற்ப ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார்கள். இவர்களைப் பின்பற்றக்கூடியவர்கள் இவரை ஈஸாவின் தோற்றமாக ஏற்றுக் கொள்கின்றனர். ஈஸாவின் சிறப்பு அம்சங்களைக் கொண்டவர்களாக மிர்ஸா குலாம் அஹ்மது உள்ளார் என்று இவர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு இஸ்லாத்தின் தூதுச் செய்தியும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் நோக்கமும் மிகத் தெளிவான முறையில் இந்த மக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பாருங்கள்! இதுதான் இறைவனின் பணியாகும். ஒருபுறம் வெல்டர் இஸ்லாத்தின் மீது பகைமை கொண்டு அதற்கு எதிராக செயல்படுவதில் முன்னேறியுள்ளார். உலகில் இஸ்லாத்தின் போதனைகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராகவும் தான் எழுதியுள்ள நூலைப் பற்றி அவர் கூறித் திரிகின்றார். அவரது நாட்டில் மட்டுமின்றி எந்தப் பகுதியில் அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றாரோ அங்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலம் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழகிய அமைதியை விரும்பும் போதனைகளை விளக்கிக் கூறப்படுவதன் மூலம் தப்பெண்ணங்கள் அகன்று வருகின்றது. எனக்கு கிடைத்த தகவலுக்கேற்ப அவரது நூலுக்கு எந்த குறிப்பான வரவேற்பும் கிடைக்கவில்லை. ஆனால் அவரது நாட்டிலேயே பத்திரிகைகள் மற்றும் எம்.பி. உடைய இணையதளம் மூலம் இலட்சக்கணக்கான மக்களுக்கு இஸ்லாத்தின் உண்மையான அழகான போதனைகள் எட்டியிருக்கின்றது. நான் ஏற்கனவே கூறியது போன்று ஹாலாந்தின் ஜமாஅத்திற்குக் கூட இந்த அளவு கவரேஜ் இருக்கும் என்ற நம்பிக்கை இருக்கவில்லை. இது அல்லாஹ்வின் பணியாகும். ஆனால் நன்றி செலுத்தும் வகையில் நாமும் பணியாற்ற வேண்டும். இப்போது ஹாலந்து ஜமாஅத் தமது தொடர்புகளை மேலும் அதிகப்படுத்துவதுடன் அதை விரிவானதாக ஆக்க வேண்டும். இஸ்லாத்திற்கு எதிராக எப்படிப்பட்ட தப்பெண்ணங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றதோ அதை அகற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். வெல்டர் கூறுகின்ற பொய்யையும், அவரது வெறுப்புணர்வையும் அவரது நாட்டை சார்ந்துள்ள மக்களிடம் தெளிவாக எடுத்து வைக்க வேண்டும்.

இன்று இஸ்லாத்தைக் காப்பதும் மற்றவர்களுடன் ஆதாரங்கள் மூலம் அவர்களை முழுமையான முறையில் தாக்குகின்ற அந்தப் பணியை அஹ்மதிய்யா ஜமாஅத்தால் மட்டும்தான் செய்ய முடியும். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விருந்தினர்களின் பொதுவான தாக்கமும் மிக நல்ல முறையில் இருந்தது. நமது ஒரு முபல்லிக் நார்வேயிலிருந்து அங்கு சென்றிருந்தார். அவருடன் அமர்ந்திருந்த ஒரு நபர் இஸ்லாத்தின் இந்த விசயங்களை இன்னும் நாங்கள் கேட்க விரும்புகின்றோம். உங்களது கலீஃபா விரைவாகவே தனது சொற்பொழிவை முடித்து விட்டார்கள் என்று கூறினார். ஒரு முதியவர் எந்த போதனைகளை நீங்கள் வழங்குகின்றீர்களோ அதுபோன்ற போதனைகளை வழங்குவதற்கு கிறிஸ்தவத்திற்கு மிகவும் காலம் தாழ்த்தியே எண்ணம் வந்திருக்கின்றது என்றார். பிறகு 2000 வருடங்கள் கழிந்த பிறகு தான் இந்த எண்ணம் அவர்களுக்கு வந்தது என்று கூறினார். அவர் கூறியதன் பொருள் கிறிஸ்தவர்களும் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து ஒரு நீண்ட காலமாக சண்டைகள் போட்டுக் கொண்டிருந்தனர். போர்களும் நடந்தன. குழப்பங்களும் ஏற்பட்டன. இப்போது தான் பல்வேறு பிரிவுகளுக்கிடையிலும் நாடுகளுக்கிடையிலும் அமைதி நிலைபெற்றுள்ளது. நீங்கள் அமைதியை ஏற்படுத்துவதற்காக மிக விரைவாக இந்த முயற்சியை செய்ய ஆரம்பித்து விட்டீர்கள். உலகிற்கு இதுபற்றி கூற ஆரம்பித்து விட்டீர்கள் என்றார்.

எவ்வாறிருப்பினும், இவர் தனது கண்ணோட்டத்தில் பார்த்துள்ளார். நாம் இந்தப் பணியை இன்றிலிருந்து ஆரம்பிக்கவில்லை. மாறாக, இந்த போதனைகள் 1400 வருடங்களுக்கு முன்னரே இவற்றை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த சமயத்திலேயே இதன் அடித்தளம் நிறுவப்பட்டு விட்டது என்பது அவருக்கு தெரியாது.

எவ்வாறிருப்பினும், இந்த மக்கள் முன்னால் எடுத்து வைக்கப்பட்ட இஸ்லாம் பற்றிய தவறான தோற்றத்தால் ஏற்பட்ட தாக்கம் இந்த நிகழ்ச்சியின் மூலமாக அழிக்கப்பட்டு விட்டது. அல்லாஹ் இனி வருங்காலத்திலும் இதற்கு சிறந்த விளைவுகளை ஏற்படுத்துவானாக! இந்த சமுதாயம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கொடியின் கீழ் வந்து விடட்டும். ஆனால், இதற்காக ஜமாஅத்திலுள்ள நபர்கள் மிகவும் அதிகமாக முயற்சிகள் செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது.

ஹாலந்திற்குப் பிறகு ஜெர்மனியில் ஆண்டு மாநாடு நடைபெற்றது. இதையும் நீங்கள் M.T.A.ல் பார்த்து விட்டீர்கள்.

ஜெர்மனியில் எங்கு மாநாட்டின் பணிகளில் ஈடுபட்டிருப்போமோ அங்கு ஜமாஅத் நாம் மேற்கொள்கின்ற ஒவ்வொரு சுற்றுப்பயணத்தின் போதும் பள்ளிவாசல்களை திறப்பது அல்லது அடிக்கல் நாட்டுவது ஆகியவற்றில் நம்மை ஈடுபடும்படி வைக்கின்றது. இந்த சுற்றுப் பயணத்தின் போதும் ஒரு பள்ளிவாசல் திறந்து வைக்கப்பட்டது. மூன்று பள்ளிவாசல்களுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

பொதுவாக அடிக்கல் நாட்டப்பட்ட பிறகு ஒரு வருடத்திற்குள் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு விடும். அல்லாஹ் ஜெர்மனி ஜமாஅத்திற்கு இந்த நல்வாய்ப்பில் வளர்ச்சி அடைந்து கொண்டே செல்லும் பாக்கியத்தை வழங்குவானாக!

இந்த முறை பள்ளிவாசல்களின் திறப்பு விழா, அடிக்கல் நாட்டுதல் ஆகிய சந்தர்ப்பங்களில் ஒரு நல்ல விசயம் அங்குள்ள ஜமாஅத்துகளில் உருவாகி வருகிறது. அது என்னவென்றால், ஒவ்வொரு நிகழ்ச்சியின் போதும் உள்ளூரிலுள்ள படித்தவர்கள், இவ்வாறே மேயர், டெபுட்டி மேயர், அரசியல்வாதிகள், அதிகாரிகள் ஆகியோரையும் இவர்கள் அழைக்கின்றனர். முதலில் அங்கு இவ்வாறு இருந்ததில்லை. இங்கு எந்த பள்ளிவாசல் கட்டப்பட்டாலும் அந்த நிகழ்ச்சிகளில் இவர்களை அழைக்கின்றோம். ஆனால், ஜெர்மனியில் முதலில் இவ்வாறு இருக்கவில்லை. இப்போது இதன் பக்கம் இவர்களுக்கு கவனம் ஏற்பட்டுள்ளது. இது அஹ்மதிய்யா ஜமாஅத்தை அறிமுகம் செய்வதற்கும் இஸ்லாத்தின் அழகிய போதனைகளைக் கூறுவதற்கும் தப்லீக் செய்வதற்கும் மிக முக்கியமானதாகும்.

நமது அசல் பணி இஸ்லாத்தின் அழகிய பணிகளை உலகின் முன்னால் எடுத்து வைப்பதாகும். உலகை உண்மையின் பக்கம் அழைப்பதாகும். பள்ளிவாசல்கள் கட்டப்படுவதுடன் தப்லீகிலும் விரிவான நிலை ஏற்படுகின்றது. நான் எப்போதும் ஜமாஅத் சகோதரர்களுக்கு இதனை கூறி வருகின்றேன். இந்த அறிமுகம் மற்றும் தப்லீகின் விரிவான நிலை ஆகியவற்றுடன் இவர்களது பொறுப்புகளும் அதிகமாகி விடுகின்றது. உங்களது நிலைமைகளை இஸ்லாமிய முன்மாதிரிக்கேற்ப வடிவமைத்துக் கொள்வது அவசியமானதாகும்.

இந்த முறை ஜமாஅத்தின் அறிமுகத்தின் விளைவாகவும், மேலும் தொடர்புகள் அதிகரித்ததன் விளைவாகவும் ஒரு துறையுடன் நமக்கு தொடர்பு ஏற்பட்டது. அதில் இராணுவ அதிகாரிகளுக்கு குறிப்பாக நல்லொழுக்கம், அரசியல், சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் திட்டங்கள் வகுப்பது மற்றும் அவர்களது சீர்திருத்தத்திற்கான நிகழ்ச்சிகள் அங்கு உருவாக்கப்படுகிறது. அங்கும் செல்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இவர்களது பணி ஜெர்மன் சமுதாயத்தில் எப்படி இருக்க வேண்டும்? இதில் இவர்களது பங்கு என்ன? என்பதைப் பற்றி பேசப்படுகிறது. பிறகு உலகம் தொடர்பாகவும் இவர்கள் பல தகவல்களை ஒன்றுதிரட்டுகின்றனர்.

சர்வதேச நாகரிகம், மதங்கள் தொடர்பாகவும் அங்கு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன. செமினார்கள் நடைபெறுகின்றன. இந்த நிகழ்ச்சிகளில் சிவில் அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகள் போன்றோரும் கலந்து கொள்கின்றனர். பிறகு இங்கு ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதில் கலந்து

கொள்வதற்கான நல்வாய்ப்பும் எனக்கு கிடைத்தது. இந்த நிகழ்ச்சியில் சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக வெளியிலிருந்து முக்கிய பிரமுகர்களை அழைக்கின்றனர். சட்டம் தெரிந்தவர்களும் வருவார்கள். பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் வருகின்றனர். பல்வேறு விசயங்களில் திறமை மிக்கவர்களாக இருப்பவர்களும் வருகின்றனர். ஜெர்மனியிலுள்ள முஸ்லிம்களின் தலைமையக அமைப்பின் தலைவர் ஈமான் மாலிக் சாஹிப் அவர்களையும் இங்கு அழைத்திருந்தார்கள். அவர்களும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். என்னையும் இங்கு சுருக்கமான சொற்பொழிவு நிகழ்த்தும்படி அவர்கள் கூறினார்கள். நான் நாட்டின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வது தொடர்பான இஸ்லாமிய போதனைகள் என்ற தலைப்பில் ஒரு சிறிய சொற்பொழிவை அங்கு நிகழ்த்தினேன். 10 அல்லது 15 நிமிடங்கள் வரை கேள்வி – பதில் நிகழ்ச்சியும் நடந்தது. இராணுவத்தின் உயர் அதிகாரிகளைத் தவிர இங்கு நகரத்தின் மேயர், படித்தவர்கள், கிறிஸ்தவ பாதிரிமார்கள், யூதர்கள் ஆகியோரும் கலந்த கொண்டனர். அல்லாஹ்வின் அருளால் இந்த சொற்பொழிவால் நல்ல தாக்கம் ஏற்பட்டுள்ளது. இஸ்லாத்தின் அழகிய போதனைகள் அந்த மக்களை சென்றடைந்தன.

ஜெர்மனி ஜமாஅத்தின் வெளி விவகாரச் செயலரான தாவூத் சாஹிப் அவர்கள் ஒரு சிலரின் கருத்துக்களை எனக்கு அனுப்பி வைத்தார்கள். எனக்கு இந்த விசயத்தில் மிகவும் வியப்பு ஏற்பட்டது. உலகிற்கு முன்னால் இருக்கின்ற பிரிச்சனைகளுக்குரிய தீர்வை ஒரு நபர் இந்த அளவு எளிதான முறையில் புரிய வைக்க முடியுமா? என்று ஒரு நபர் கூறினார் என்று அவர் குறிப்பிடுகிறார். இதுதான் இஸ்லாத்தின் அழகிய போதனையாகும். இதனை நாம் சரியாக விளக்கிக் கூறும்போது ஒவ்வொரு நபருக்கும் இதுபற்றி தெரிய வருகிறது.

பிறகு இன்னொருவர் இவ்வாறு கூறினார்: உங்களது கலீஃபாவின் சொற்பொழிவில் பல விசயங்கள் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இஸ்லாம் தொடர்பாக நீங்கள் கூறும் விசயங்களை கண்முன் நிறுத்தி செயல்பட்டால் முஸ்லிம்கள் ஒன்றுபடுவது கண்டிப்பாக சாத்தியமானதாக ஆகி விடும். இந்த கேள்வி இன்று ஐரோப்பாவில் ஒவ்வொரு இடத்திலும் எழுகின்றது. முஸ்லிம்கள் எங்களுடன் இணைந்து ஒன்றுபட முடியாது. இவர்கள் ஒரு பிரிவினராக பிரிந்து தான் இருப்பர் என்ற கருத்து நிலவி வந்தது. எனது சொற்பொழிவைக் கேட்ட பிறகு இவர் இது மேற்கத்திய சமுதாயத்தில் இருக்கின்ற மக்களிடம் உருவாகியுள்ள முற்றிலும் தவறான கற்பனையாகும் என்று கூறினார். இவ்வாறே சிலர் இஸ்லாத்தின் அழகான போதனைகள் தொடர்பாக தமது வியப்பை வெளிப்படுத்தி இருந்தார்கள்.

இந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொண்டவர்கள்தான் இந்தப் பணியைச் செய்ய வேண்டும். இஸ்லாத்தின் உண்மையான அழகான போதனையை உலகின் முன்னால் எடுத்து வைக்க வேண்டும். அதன் மூலம் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்களின் வாயை அடைக்க வேண்டும். பெரும்பாலான அதிகாரிகள் என்னிடமும் என்னுடன் இருந்தவர்களிடமும் இந்த சொற்பொழிவை எழுத்து வடிவில் எங்களுக்கு தாருங்கள் என்று கூறினர். ஜெர்மன் ஜமாஅத் இதை ஜெர்மனி மொழியில் மொழிபெயர்த்து வருகிறது. பிறகு இதை அவர்களுக்கு அது அனுப்பி வைத்து விடும்.

பிறகு ஜெர்மனி மாநாட்டின் போது அவர்களது நிரந்தரமான வழிமுறையாக இருந்து வருவது ஜெர்மன் மற்றும் அஹ்மதியல்லாதவர்கள் முஸ்லிம் அல்லாத மற்ற மக்கள் ஆகியோருடன் ஒரு நிகழ்ச்சி நடப்பதாகும். இதிலும் 500 அல்லது 600 ஆண்கள், பெண்கள் ஆகியோர் ஒன்றுதிரண்டு விடுவார்கள். எனக்கும் அவர்களுக்கு சில விசயங்களைக் கூறுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இந்த முறையும் இஸ்லாத்தின் போதனை, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கம், உலகில் தற்போதுள்ள நிலைமை, உலகம் இறைவனை மறந்து விட்ட காரணத்தால் அழிவின் பக்கம் செல்கின்றது

என்பதைப் பற்றி எடுத்துக் கூறி அவர்களை எச்சரிப்பதறகான நல்வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இந்த அழிவிலிருந்து தப்பிப்பதற்கு ஒவ்வொரு நபரும் தனது பங்கை எப்படி வசிக்க வேண்டும்? என்பதைப் பற்றி நான் கூறியிருந்தேன். இந்த சொற்பொழிவு நேரடியாக M.T.A.ல் ஒளிபரப்பப்பட்டது. நீங்கள் அதை கேட்டிருப்பீர்கள்.

இந்த நிகழ்ச்சியிலும் 500க்கும் அதிகமாக ஜெர்மனியர்களும், அஹ்மதி அல்லாதவர்களும், முஸ்லிம் அல்லாதவர்களும் கலந்து கொண்டனர். இதற்கு மிக அதிகமான நல்ல தாக்கம் ஏற்பட்டது. பிறகு பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த ஜமாஅத்தைச் சாராத மற்ற சகோதரர்களுடன் எனது சந்திப்பு ஏற்பட்டது. மிகப்பெரிய குழு ஒன்று பல்கேரியாவிலிருந்து வந்திருந்தது. அதில் ஏறக்குறைய ஆண்கள், பெண்கள் 80 பேர் இருந்தனர். இவர்களில் 13 அல்லது 14 பேர்தான் அஹ்மதிகள் ஆவர். எஞ்சி இருந்தவர்களில் பெரும்பாலார் மற்ற முஸ்லிம்களாக இருந்தனர். அவர்களில் சிலர் கிறிஸ்தவர்களாகவும் இருந்தனர். எல்லா மக்களும் மாநாட்டு நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் ஆகியவற்றால் மிகவும் சிறந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளனர். ஒவ்வொரு வருடமும் பெரும் எண்ணிக்கையில் புதியவர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து வருகின்றனர். பல்கேரியாவிலிருந்தும் வருகின்றனர். பொதுவாக மாநாட்டைப் பார்த்து விட்டு நல்ல தாக்கத்தைப் பெறுகின்றனர். சிலருக்கு இந்த மாநாடு அவர்களது நெஞ்சம் திறப்பதற்கு காரணமாக ஆகிவிடுகின்றது. பல்கேரியாவிலிருந்து வந்திருப்பவர்களிடம் பேசிக் கொண்டிருந்த சமயத்தில் அவர்களிலிருந்து ஓர் இளைஞர் என்னிடம் "அல்லாஹ்விற்கு அஞ்சியவாறு நாங்கள் பணிகளைச் செய்கின்றோம். அல்லாஹ்வுக்காக இந்தப் பணிகளை செய்கின்றோம் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். இதற்கு என்ன ஆதாரம் உங்களிடம் இருக்கின்றது?" என்று கேட்டார். அதற்கு நான் மற்ற விசயங்கள் ஒரு பக்கம் இருக்கட்டும். ஆப்பிரிக்காவில் மிக தொலைவிலுள்ள பகுதிகளுக்கு நாங்கள் சென்று இன மற்றும் மத பாகுபாடின்றி எவ்வித பேதமுமின்றி அவர்களுக்கு நாங்கள் தொண்டு செய்கின்றோம். இதற்கான தகவல்கள் உலகின் ஒவ்வொரு இடத்திலும் உங்களுக்கு கிடைக்கும். நீங்கள் விரும்பினால் அதை பொறுத்துக் கொள்ளலாம். இது போதுமான அளவிலுள்ள சான்றாக இருக்கின்றது. நாங்கள் இந்த மக்களிடமிருந்து எதையும் பெறப்போவதில்லை. இந்த மக்கள் ஏக இறைவனை வணங்குபவர்களாக ஆகிவிட வேண்டும் என்ற ஒரே முயற்சியை நாம் செய்து வருகின்றோம். இந்த முயற்சியிலேயே நாங்கள் எங்களது பணிகளைச் செய்து வருகின்றோம் என்று நான் கூறினேன். பல்கேரியா எப்படிப்பட்ட நாடு என்றால் இங்கு சில வருடங்களாக ஜமாஅத்திற்கு தப்லீக் செய்வதற்கும் எல்லா வகையான செயல்பாடுகளிலிருந்தும் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இங்கு ஜமாஅத் பதிவு செய்யப்படவில்லை. அரசாங்கம் முல்லாக்களின் தாக்கத்தின்கீழ் இருக்கின்றது. முஸ்லிம்களின் உள்பூசல்களை முடிவுக்கு கொண்ட வருவதற்காக நாங்கள் அவ்வாறு செய்கின்றோம். ஒரே குத்பா கொடுக்கப்பட வேண்டும். ஒரே பிரிவினராக எல்லாரும் செயல்பட வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் செயலளவில் இதுபோன்ற நிலை அங்கு இல்லை. உண்மை என்னவென்றால் சில அரபு நாடுகளிலிருந்து பெறுகின்ற உதவிகளின் காரணமாக அஹ்மதிகளுக்கு தப்லீக் செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதை இவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இதன் மூலம் இவர்களது வருவாய் நின்று விடும். இவ்வாறிருந்தும் கூட இங்கு பைஅத்துகள் நடைபெறுகின்றன. இவ்வாறே மால்டா, ஸ்பெயின், துருக்கி, போஸ்னியா ஆகிய நாடுகளிலிருந்து வந்திருந்த அஹ்மதிகள், அஹ்மதி அல்லாதவர்கள் ஆகியோரை நான் சந்தித்தேன். அல்லாஹ்வின் அருளால் இவர்கள் அனைவர் மீதும் மாநாட்டின் ஆழமான நல்ல தாக்கம் இருந்தது.

இந்த வருடம் புதிதாக பைஅத் செய்தவர்களின் பைஅத்தை நான் பெரிய ஹாலில் வைத்து செய்ய வைத்தேன். ஒவ்வொரு வருடமும் அங்கு புதிதாக பைஅத் செய்கின்றவர்கள் வந்து பைஅத் செய்கின்றனர். பொதுவாக அவர்களுடன் தனியாக சந்திப்பு நடைபெறும் சமயத்தில் அங்கு வைத்து பைஅத் நடக்கும். ஆனால், இந்த முறை பெரிய ஹாலில் வைத்து இவர்கள் பைஅத் செய்யட்டும் என்று நான் கூறி விட்டேன்.

இதன் காரணமாக மற்றவர்களும் இதில் கலந்து கொள்ள முடியும் என்று கூறினேன். அல்லாஹ்வின் அருளால் இந்த பைஅத்தின் காட்சியும் ஈமானுக்கு மிகவும் வலுவூட்டக் கூடியதாக இருக்கின்றது. ஒரு நபருக்கு நீண்ட காலமாக ஜமாஅத்துடன் தொடர்பு இருந்து வந்தது. இவர் ஈரானைச் சார்ந்தவர் என்று நினைக்கின்றேன். இவர் அங்கு அனைவருடனும் சேர்ந்து அமர்ந்திருந்தார். எல்லா கூட்டங்களிலும் அவர் கலந்து கொண்டார். ஆனால், பைஅத் செய்வதற்கான எண்ணம் அவருக்கு இருக்கவில்லை. ஆனால் பைஅத் ஆரம்பமானபோது ஏதோ ஒரு சக்தி எனது கையை முன்னே நீட்டும்படி செய்தது. நானும் முன்னே சென்று எனது கையை வைத்தேன். நான் பைஅத் செய்து விட்டேன். இது தற்காலிகமாக என்னிடம் ஏற்பட்ட உணர்வல்ல. இப்போது நான் உறுதியான அஹ்மதியாக இருக்கின்றேன். இன்ஷா அல்லாஹ் நான் எனது பைஅத் உடன்படிக்கையில் நிலைத்திருப்பேன். அதை நிறைவேற்றுவேன். ஒரு புதிய உணர்வும் உத்வேகமும் என்னிடம் ஏற்பட்டுள்ளது என்று இவர் கூறுகின்றார்.

அல்லாஹ் இவர்கள் அனைவரது ஈமானிலும் நிச்சய உறுதியிலும் முன்னேற்றத்தை வழங்குவானாக! மாநாட்டின் மூலம் ஒவ்வொருவரும் பெற்று கொண்ட அருள்கள் அனைத்தும் நிரந்தரமான அருள்களாக ஆகட்டுமாக!

எவ்வாறிருப்பினும் பொதுவாக ஜெர்மனியின் ஆண்டு மாநாடு மிகவும் நல்ல முறையில் நடைபெற்றது. நான் இடையிடையே M.T.A. மூலமாக சொற்பொழிவுகளைக் கேட்டேன். அந்த சொற்பொழிவுகளின் தரம் மிக நல்ல நிலையில் இருந்தது. அருள்களைச் சேகரித்து, சேகரித்த அருள்களை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கக்கூடியதாக இந்த மாநாடு இருந்தது. ஜல்ஸாவின் தயாரிப்பிற்காக மாநாட்டு அமைப்பாளர்கள் முழு வருடமும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஏறக்குறைய ஜெர்மனியின் ஆண்டு மாநாட்டின் எல்லா ஏற்பாடுகளும் ஒரே கூரையின் கீழ் நடந்து வந்தாலும் கூட வகாரே அமல் மற்றும் இதர பணிகளைக் கொஞ்சமாவது செய்ய வேண்டியது வருகின்றது.

இந்த வருடம் பாகிஸ்தானிலிருந்து வந்திருக்கும் புதிய தன்னார்வத் தொண்டர்கள் மிகவும் உணர்வுடன் பணியாற்றினர். மாநாட்டு அமைப்பாளர்கள் கூறினார்கள். இவர்களில் 200 நபர்களில் தேவை இருக்கும் போது அந்த நபர்களை நாங்கள் அழைத்தால் 400 தன்னார்வத் தொண்டர்கள் பணியாற்றுவதற்காக வந்து விடுகின்றனர். இவர்களது Case ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகும் கூட அவர்களது இந்த உணர்வு இவ்வாறே நிலைத்திருக்குமாறு அல்லாஹ் செய்வானாக! இப்போதுள்ள பாகிஸ்தானின் நிலைமை, நீண்ட காலமாக அவர்களுக்கு இருந்து வந்த இழப்பு ஆகியவற்றின் தாக்கமும் இருக்கின்றது. ஆனால் Case Pass ஆன பிறகும் கூட உண்மையிலேயே இறைவனுக்கு நன்றி செலுத்துவது எவ்வகையில் இருக்க வேண்டும் என்றால் ஒன்று, இறைவனை வணங்குவதில் கவனமற்றவர்களாக இருந்துவிடக் கூடாது. இரண்டாவது உலகத்திற்காக ஜமாஅத் பணிகளை முதுகுக்குப் பின்னால் எறிந்து விடாதீர்கள். கிலாஃபத்துடன் அன்பு மற்றும் பற்றின் தொடர்பை வையுங்கள். ஒவ்வொரு வருடமும் இது தொடர்பான அனுபவமும் புதிதாக இருக்கின்றது. அல்லாஹ் இந்த தொடர்பையும் வளர்ச்சியடையச் செய்வானாக!

நான் ஏற்பாடுகள் தொடர்பாகவும் சில விசயங்களை கூறி விடுகின்றேன். அங்கு இதுபற்றி கூறுவதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கவில்லை. இதன் பலன் உலகிலுள்ள மற்ற பகுதியில் உள்ளவர்களுக்கும் கிடைத்து விடும். உள்ளூரில் செய்யப்பட்ட அனைத்து ஏற்பாடுகளும் பொதுவாக நன்றாகவே இருந்தது. பெரிய ஏற்பாடுகளைச் செய்கின்ற போது பொதுவாக ஏற்படுவது போன்றே சில புகார்களும் வந்து விடுகின்றன. ஜெர்மனியில் இந்த ஜல்ஸா நடப்பதற்கு முன் நிகழ்த்திய குத்பா உரையில் இதுபற்றி குறிப்பிட்டிருந்தேன். சில துறைகள் மீது அதிகமாக புகார்கள் இருந்தன. அதில் விருந்தோம்பல் செய்யும் துறை மிக முக்கியமான துறையாகும். உணவு குறைவாக இருந்தது அல்லது உணவு வழங்குவதற்கான ஏற்பாடு சரியாக இருக்கவில்லை. மக்களுக்கு நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியது வந்தது.

வெகு நேரம் வரிசையில் நிற்பதற்குப் பதிலாக மக்கள் கடை வீதியில் ஏதாவது வாங்கி சாப்பிட்டு விட்டு வந்தனர். பெண்களிலும் இதே நிலைதான் இருந்தது. இதன் காரணமாக குழந்தைகளுக்கும் தொல்லை ஏற்பட்டது. பணியில் இருந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் சில சமயம் உணவு கிடைக்காமல் இருந்தது. குறிப்பாக பெண்கள் தங்கள் தரப்பிலிருந்தும் இதற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டியது வந்தது. முதல் நாளில் அல்லது ஏதாவதொரு சமயத்தில் இந்த நிலை உருவானதும் ஜல்ஸா ஸாலானாவின் உயர் அதிகாரி மற்றும் அவருக்கு கீழ் உள்ள அமைப்பு உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இதற்கான காரணம் என்ன? என்பதைக் கேட்டு தெரிந்திருக்க வேண்டும். இது தொடர்பாக அவர்கள் ஏதாவது முயற்சியும் செய்திருக்கலாம்.

ஆனால் எவ்வாறிருப்பினும் அதற்கான சிறந்த முடிவுகள் ஏற்படவில்லை. கடைசி நாள் வரையிலும் இதே குறை உணரப்பட்டது. மாநாட்டு அமைப்பாளர்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். எப்போதும் இந்த வழிமுறை இருந்திருக்கின்றது. பாகிஸ்தானிலும் இந்த வழிமுறைதான் இருந்தது. ஒவ்வொரு நாள் இரவிலும் ஜல்ஸா ஸாலானாவின் உயர் அதிகாரி, எல்லா துணை அதிகாரிகளுடன் நாஸிம்களுடனும் மீட்டிங் நடத்துவார். இவ்வாறு ஒவ்வொரு துறை பற்றியும் ஆய்வு செய்யப்படும். எங்கு குறை இருக்கின்றது? அதை மறுநாள் எப்படி சரி செய்ய முடியும்? என்று ஆலோசனை நடக்கும். லங்கர் கானா தொடர்பான ஆய்வு நடக்கும். எந்த அளவு உணவு சமைக்கப்பட்டது? எத்தனை விருந்தினர்கள் சாப்பிட்டனர்? குறைவு ஏற்பட்டுள்ளதா? அதிகமாக சமைக்க வேண்டியது வந்ததா? உணவு அதிகமாக மிஞ்சி இருந்ததா? என்பதையெல்லாம் ஆய்வு செய்து பார்த்து விட்டு அதற்கேற்ப அடுத்த நாளின் தேவைகள் கணிக்கப்படும். மக்கள் கூறும் விசயங்களைக் கேட்காமல் தட்டி கழிப்பதற்குப் பதிலாக அதைப் பற்றி ஜல்ஸா ஸாலானாவின் உயர் அதிகாரி அவர்களுக்கு தகவல் கொடுப்பது விருந்தோம்பல் செய்கின்ற துறையின் பணியாகும். இன்று இவ்வளவு மக்களும் விருந்தினர்களும், பணியில் இருந்தவர்களும் உணவருந்தினர். இத்தனை பேருக்கு உணவு கிடைக்கவில்லை என்று தகவல் கொடுக்க வேண்டும். இதற்கான காரணம் என்ன? என்பதை மற்ற துறைகள் முடிவு செய்ய வேண்டும். முறையாக இதற்கான ரிக்கார்டு வைக்கப்பட வேண்டும். இந்த ஆய்வின் மூலம் மறுநாள் அல்லது அடுத்த வேளை உணவு வழங்கும்போது அதில் சிறந்த நிலைமையை ஏற்படுத்த முடியும். முறையாக இந்த மீட்டிங் நடத்தப்பட்டு அடுத்த நாளுக்கான திட்டமும் வகுக்கப்பட்டிருந்தால் உடடினயாக சிறந்த நிலைமை உருவாகியிருக்கும்.

இவ்வாறே ஷுஹ்பா முஆயினா – அதாவது கண்காணிக்கும் துறையும் இருக்கின்றது. இது ஜல்ஸா ஸாலானாவின் துறையாக இருக்கின்றது. இதற்கு உதவியாளர்களும் இருப்பார்கள். அவர்கள் பல இடங்களுக்குச் சென்று கண்காணிப்புப் பணியைச் செய்து அங்கு சரியாக பணி நடக்கின்றதா? இல்லையா? என்பதை ஆய்வு செய்து பார்ப்பார்கள். அவசர கால நடவடிக்கை ஏதாவது தேவைப்பட்டால் அதனால் உடனடியாக சீர்திருத்தம் செய்ய முயற்சி செய்யப்படுகிறது. எவ்வாறிருப்பினும், இந்த துறையை இன்னும் சிறந்த நிலையில் மேம்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது.

இவ்வாறே மாநாட்டுத் திடலில் குளியலறைகள் மற்றும் கழிவரைகள் குறைவாக இருந்தது உணரப்பட்டது. ஆனால், இந்த காம்ளக்ஸில் எண்ணற்ற குளியலறைகள் உள்ளே கட்டப்பட்டுள்ளன. ஏதோ காரணத்தால் அவை திறக்கப்பட வில்லை. முதிய வயதிலுள்ள சில பெண்களுக்கும் ஆண்களுக்கும் இதனால் கஷ்டம் ஏற்பட்டது. ஆனால் நோயாளிகளுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் தனியாக சிறப்பான ஏற்பாடு செய்ய முடியும்; அவ்வாறு செய்திருக்க வேண்டும். இந்த நாடுகளில் அவ்வாறான ஏற்பாடு இருக்கின்றது. டியூட்டியில் இருக்கின்ற ஆண்களும், பெண்களும் விதிமுறைகளில் இந்த அளவு கடினத்தைக் காட்ட வேண்டாம். குறிப்பாக இந்த தருணத்தில் கடினமாக நடந்து கொள்ளக் கூடாது. எல்லாருக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது உங்களது பணியாகும். மாநாட்டு அமைப்பாளர்கள் முதலில் குளியலறைகளை திறப்பதற்கான அனுமதியைப் பெறாமல் இருந்திருந்தால் நிலைமைகளைக் கருத்தில் கொண்டவாறு உடனடியாக அனுமதி பெற்றிருக்க வேண்டும். வாடகை செலுத்த வேண்டும் என்ற பிரச்சனை இருந்தால்

அல்லது செலவு செய்யாமல் தொகையை மிச்சப்படுத்த வேண்டியது இருந்தால் உண்மையில் தொகையை மிச்சப்படுத்துவது நல்ல விசயம் தான். ஆனால், எப்போதும் இதை நாம் நினைவில் வைக்க வேண்டும். விருந்தினர்களுக்கு விருந்தோம்பல் செய்வதில் குறைவை ஏற்படுத்தி நாம் எவ்வகையிலும் தொகையை மிச்சப்படுத்த முடியாது. விருந்தோம்பலை குறைவாக செய்து தொகையை மிச்சப்படுத்துவது சரியல்ல. விருந்தினர்களுக்கு விருந்தோம்பல் செய்வது எல்லா நிலையிலும் எல்லாவற்றையும் விட முதன்மையானதாக இருக்கின்றது. ஜல்ஸா ஸாலானாவின் உயர் அதிகாரியின் கீழுள்ள ஒரு சிறப்புக் குழு இதுபற்றி ஆய்வு செய்து பார்த்திருந்தால் இங்கு ஏற்பட்ட குறைகள் அல்லது சிலருக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் ஏற்படாமல் இருந்திருக்கும்.

இவ்வாறே சில வெளிநாட்டு விருந்தினர்கள் தரப்பிலிருந்தும் புகார்கள் வந்துள்ளன. வெளிநாடுகளிலிருந்து அதாவது ஐரோப்பாவின் மற்ற நாடுகளிலிருந்து புதிதாக பைஅத் செய்தவர்கள் வந்திருந்தனர். அவர்களை விசாரிக்க யாருமே இல்லை என்ற நிலை இருந்தது. அவர்களில் ஒரு சிலர் வெறுப்படைந்து கோபப்பட்டு திரும்பிச் சென்று விட்டனர். எந்த நாட்டிலிருந்து அவர்கள் வந்திருந்தார்களோ அந்த நாட்டின் அமீர், முரப்பி அல்லது கண்காளிப்பாளர் இவர்களை தங்களுடன் அழைத்து வந்திருக்கும்போது அவர்களுக்கு முழுமையாக உதவி செய்திருக்க வேண்டியது அவர்களது பணியாகும். அவர்களோடு வரவில்லையென்றால் அவர்களை சந்திக்கும் இடம், ஏற்பாடுகள் தொடர்பான முழுமையான விபரங்களை அவர்களுக்கு தெரிவித்திருக்க வேண்டும். பிறகு வரவேற்புத்துறை, விருந்தோம்பல் துறை, தங்கும் வசதிகளை ஏற்படுத்தும் துறை ஆகியவை வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற விசயங்களில் முழுமையான முறையில் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு தகுந்த வழிகாட்டலை அவர்களுக்கு வழங்கி இருக்க வேண்டும்.

இவ்வாறே அங்கு அழைத்து வரப்பட்ட புதிதாக பைஅத் செய்தவர்கள் அல்லது விருந்தினர்கள் திரும்பிச் செல்வதற்காக முறையான போக்குவரத்து ஏற்பாடுகளும் இருக்கவில்லை. சிலருக்கு இரவு 10.00 மணி வரை காத்திருக்க வேண்டியது வந்தது. ஆனால் வரவேற்புத்துறை, அவர்கள் திரும்பிச் செல்வதற்கு போக்குவரத்து ஏற்பாடுகளை செய்திருக்க வேண்டும்.

எவ்வாறிருப்பினும், ஒரு சிலருக்கு கூட ஏற்பாடுகளில் இருந்த குறையின் காரணமாக ஏதாவது கஷ்டத்தை சந்திக்க நேர்ந்தாலும் இது கவனம் செலுத்தப்பட வேண்டிய விசயங்களாகும். வருங்காலத்தில் இவற்றை சீர்திருத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். விருந்தினர்களுக்கு விருந்தோம்பல் செய்வது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது சம்பவங்களை நாம் பிறருக்குக் கூறுகின்றோம். ஒருமுறை மணிப்பூரிலிருந்து விருந்தினர்கள் வந்தனர். அவர்கள் லங்கர் கானாவுக்கு வந்தனர். அங்கு தொண்டு செய்தவர்கள் சரியான முறையில் அவர்களது சாமான்களை இறக்குங்கள் என்றோ அல்லது வேறு ஏதாவது விசயத்தையோ அவர்கள் கூறினர். இதைக் கேட்டு வெறுப்படைந்து அவர்கள் திரும்பிச் சென்று விட்டனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு இதுபற்றி தெரிய வந்த போது அவர்கள் மிக விரைவாக அவர்களுக்கு பின்னால் சென்றார்கள். மிக தூரம் வரை நடந்து சென்று நதிக்கு அருகில் குதிரை வண்டியில் சென்று கொண்டிருந்த அவர்களை தடுத்து நிறுத்தியதாக கூறப்படுகின்றது. அவர்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் திரும்ப அழைத்து வந்தார்கள். அங்கு வந்து அவர்களே அந்த விருந்தினர்களின் சாமான்களை இறக்க ஆரம்பித்தார்கள். இப்படிப்பட்ட விருந்தோம்பலின் முன்மாதிரி நம் முன்னால் இருக்கின்றது.

எப்போதும் ஜமாஅத்திலுள்ள துறைகள், ஜமாஅத் அமைப்பு இந்த விசயங்களை தங்கள் கண் முன்னால் வைத்திருக்க வேண்டும்.

நமது தரத்தை மேம்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. நான் ஆரம்பத்தில் ஜெர்மனியில் நிகழ்த்திய குத்பா உரையில் சுருக்கமாக இந்த விசயங்களின் பக்கம் கவனமூட்டியிருந்தேன். அதை கொஞ்சமாவது சிந்தித்துப் பார்த்திருந்தால் சில இடங்களில் ஏற்பட்ட குறைபாடுகள் அல்லது சிலருக்கு ஏற்பட்ட துன்பங்கள் ஆகியவை ஏற்பட்டிருக்காது. இந்த விசயங்கள் காரணமாக மாநாட்டு அமைப்பாளர்கள் செய்கின்ற மற்ற நல்ல பணிகளின் தாக்கமும் அழிந்து விடுகின்றது.

எல்லா நாடுகளிலும் மாநாடுகள் நடக்கின்றன. இங்கு U.K.யிலும் ஜல்ஸா நடக்கும் இன்ஷா அல்லாஹ். ஏறக்குறைய தலைமையக ஜல்ஸா என்று அது கூறப்படுகிறது. இவர்களும் எல்லா நாடுகளிலுள்ள மாநாட்டு அமைப்பாளர்களும் மிகவும் ஆழமான பார்வையுடன் இந்த விசயங்களை தங்கள் கண் முன்னால் வைத்திருக்க வேண்டும். உலகில் எங்கே ஒரு நாட்டில் இந்த சம்பவம் நடந்துள்ளது. நாம் இருக்கும் இடத்தில் இவ்வாறு நடக்கவில்லை என்று கருதாமல் ஒவ்வொரு இடத்திலும் எந்தந்த துறைகளில் குறைபாடுகள், பலவீனங்கள் இருக்கின்றதோ அவற்றை சரி செய்ய வேண்டும். அதன் மூலம் மாநாட்டின் நல்ல தாக்கங்களும் எல்லா இடங்களிலும் நிலைத்திருக்க வேண்டும்.

பெண்கள் தொடர்பாகவும் கூறி விடுகின்றேன். பொதுவாக மெயின் ஹாலில் அமைதி நிலவியது. ஆனால், குழந்தைகள் இருந்த ஹாலில் குழந்தைகள் சப்தம் போடுகின்றார்கள் என்பதை சாக்காக வைத்து பெண்கள் அதிகமாக பேச ஆரம்பித்து விட்டார்கள் என்றே எனக்கு ரிப்போர்ட் கிடைத்தது. இதைப் பற்றி நான் அங்கேயே கூறி இருந்தேன். இது நடக்கக்கூடாது. வருங்காலத்தில் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். எவ்வாறிருப்பினும் இவை எல்லாம் நிகழ்ந்திருந்தும் கூட நான் ஆரம்பத்தில் கூறியது போன்றே இந்த மாநாடு பொதுவாக மிக நல்ல முறையில் நடந்தது. நிகழ்ச்சிகள் நல்ல முறையில் நடந்தன. சொற்பொழிவுகளும் சிறந்த முறையில் இருந்தன. மக்களது உணர்வுகளும் நல்ல முறையில் இருந்தது. மக்களது உணர்வுகளும் நல்ல முறையில் இருந்தது. அல்லாஹ் இதன் அருள்களை எப்போதும் நிலைத்திருக்கும்படி செய்வானாக! கலந்து கொண்ட எல்லாருக்கும் பணியில் இருந்த எல்லாருக்கும் நாம் நன்றி செலுத்த வேண்டும். அவர்கள் விருந்தினர்களுக்காக டியூட்டி கொடுத்தார்கள். நேரத்தை செலவு செய்தார்கள். உழைத்தார்கள். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் நற்கூலியை வழங்குவானாக! பணியில் இருக்கின்ற ஆண்களும், பெண்களும் இறைவனுக்கு நன்றி செலுத்துபவர்களாக இருக்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்கான சந்தர்ப்பத்தை அவர்களுக்கு வழங்கியுள்ளான். அல்லாஹ் இவர்கள் அனைவரையும் அவ்வாறே ஒவ்வொரு அஹ்மதியும் எப்போதும் மற்றவர்களிடம் அனுதாபத்துடன் நடந்து கொள்வது, தொண்டு செய்வது ஆகிய உணர்வுகளால் நிரப்புவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 08.06.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456